DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT AND SESSIONS COURT/SPECIAL COURT UNDER E.C ACT CASES, THANJAVUR

C.C.No.66/2024

Prosecution PW -2

| | | | |
|---|---|---|---|
| Name | பரமேஸ்வரன் பத்மநாதன் | Occupation | |
| Husband/Father Name | | Village | |
| Taluk | | Age | |
| Date | 16.02.2026 | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873

Accused A4 present. A1 produced on PT warrant thorough VC, A3 produced. On memo by counsel for A3 request being examined. A2 died.

<u>முதல் விசாரணை</u>

நான் பண்ருட்டி போக்குவரத்து காவல்நிலைய ஆய்வாளராக பணிபுிாந்து வருகிறேன். கடந்த 26.02.2023 ஆம் தேதி நான் மேற்படி காவல்நிலையத்தில் பணியிலிருந்தபோது எனக்கு கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையில், உதவி ஆய்வாளர் சிவக்குமார் முதல்நிலை காவலர்கள் சபரிநாதன், நீலகண்டன், கார்த்திகேயன் என்பவரை அழைத்து கொண்டு, பண்ருட்டி-சென்னை செல்லும் மெயின்ரோட்டில் சித்திரைசாவடி பஸ் நிறுத்தம் அருகே 13.45 மணிக்கு வாகனத்தணிக்கை செய்த போது, TN-45-BR-4595 என்ற பதிவெண் கொண்ட சில்வர் கலர் டோயோட்டோ எடியோஸ் கார் கோலியனுார் மார்க்கத்திலிருந்து பண்ருட்டி நோக்கி வந்த காரை நிறுத்தி சோதனை செய்த போது, காரில் டிரைவர் சீட்டிற்கு அருகே அமர்ந்து வந்த நபரின் காலுக்கு கீழே வெள்ளை நிற சாக்குப்பையில் ஏதோ ஒரு பொருள் வைத்திருந்தார். பின் சீட்டில் அமர்ந்திருந்த ஒரு நபர் தன் இருக்கை அருகே ஒரு பெரிய சூட்கேஸ் வைத்திருந்தார், அவரை நான் விசாரித்தபோது முதலில் முன்னுக்குப்பின் முரணாக கூறினார்கள் பின்னர் அவரை விசாரிக்க காரில் பின் இருக்கையில் அமர்ந்திருந்த நபர் தன் பெயர் நதீஷ் என்றும், யாழ்பாணம் இலங்கையை சேர்ந்தவர் என்றும் கூறிய உடன் தன் பாஸ்போட்டை காண்பிக்க ஆய்வாளர் கேட்டதை அடுத்து தான் 12 வருடங்களாக திருச்சியில் தங்கியிருப்பதாகக் கூறினார். முன்இருக்கையில் அமர்ந்திருந்தவரை விசாரிக்க

அவர் தன் பெயர் மாதவன் என்றும், திருச்சியை சேர்ந்தவர் என்றும், திருச்சி அகதிகள் முகாமில் இருப்பதாகக் கூறினார். காரிலிருந்து தப்பி ஓட முயன்றவர்களை மடக்கிப்பிடித்து என்னையும், மற்ற போலிசாரையும் அறிமுகம் செய்து கொண்டு நான் 1 வது எதிரியிடம் தாங்கள் கஞ்சா எனும் போதைப்பொருள் வைத்துள்ளதாக தகவல் வந்துள்ளதாகவும், உங்களை சோதனை செய்ய வேண்டும் என்றும் அவ்வாறு சோதனை செய்ய உங்களை நீதித்துறை நடுவரிடமோ, அரசிதழ் பதிவு பெற்ற அதிகாரிடமோ சோதனை செய்து கொள்ள உங்களுக்கு உரிமை உள்ளது என்று சொல்லி, சோதனை அறிவிப்பு நமுனா சார்வு செய்தேன். அதற்கு அந்த நபர் அவ்வாறு தேவையில்லை, ஆய்வாளராகிய நீங்களே சோதனை செய்யலாம் என்று சொன்னார். அந்த சோதனை அறிவிப்பு நமுனாவில் சிவக்குமரிடமும் சபரிநாதனும் சாட்சி கையெழுத்து பெற்றேன். அந்த சோதனை அறிவிப்பு நமுனா அ.த.சா.ஆ-**1** ஏற்கனவே குறியீடு செய்யப்பட்டது. பின்னர் 1 வது எதிரியை விசாரிக்க 1 வது எதிரி தானாக முன்வந்து கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தினை சிவக்குமார் மற்றும் சபரிநாதன் முன்பாகவும் பதிவு செய்தேன். பின்னர் ஆஜர் செய்த சூட்கேஸ் திறந்து சோதனை செய்தபோது 10 கிலோ கஞ்சா இருந்தது. 2 வது எதிரி மாதவன் வைத்திருந்த சாக்குப்பையை சோதனை செய்த போது 6 கிலோ அளவிற்கு கஞ்சா இருந்தது. 10 கிலோ கஞ்சாவில் இருந்து மாதிரிக்காகவும் பகுப்பாய்விற்காகவும் இரண்டு 50 கிராம் வீதம் கஞ்சாவை எடுத்து பாலிதீன் கவரில் போட்டு, காக்கி கவரில் மடித்து நூலால் கட்டி, SHO சீல் வைத்தேன். சாட்சிகளாக சிவக்குமார் மற்றும் சபரிநாதன் ஆகியோரிடம் கையொப்பம் பெற்றேன், நானும் எதிரியும் கையொப்பம் செய்தோம். மீதம் உள்ள 9.900 கிலோ கஞ்சாவை அதே பாலிதீன் கவரில் போட்டு காக்கி கவரில் மடித்து நூலால் கட்டி, SHO சீல் வைத்தேன். சாட்சிகளாக சிவக்குமார் மற்றும் சபரிநாதனிடம் கையொப்பம் பெற்று, நானும் எதிரியும் கையொப்பம் செய்தோம். மாதிரி கஞ்சாவையும் மீதம் உள்ள கஞ்சாவையும் மற்றும் நீல பச்சை நிறம் கலந்த டிராலி சூட்கேஸ் ஒன்று வெள்ளை நிற சாக்குப்பை மற்றும் நான்கு சக்கர வாகனம் கைப்பற்றுதல் மகசரில் சிவக்குமார் சபரிநாதன் முன்னிலையில் கைப்பற்றினேன். அந்த கைப்பற்றுதல் மகசர் அ.த.சாஆ-**2** ஆக ஏற்கனவே குறியீடு செய்யப்பட்டுள்ளது. 2 வது எதிரி மாதவன் வைத்திருந்த சாக்குப்பையை சோதனை செய்த போது 6 கிலோ அளவிற்கு கஞ்சா இருந்தது. 6 கிலோ கஞ்சாவில் இருந்து மாதிரிக்காகவும் பகுப்பாய்விற்காகவும் இரண்டு 50 கிராம் வீதம் கஞ்சாவை எடுத்து பாலிதீன் கவரில் போட்டு, காக்கி கவரில் மடித்து நூலால் கட்டி, SHO

சீல் வைத்தேன். சாட்சிகளாக சிவக்குமார், சபரிநாதனிடம் கையொப்பம் பெற்றேன், நானும் எதிரியும் கையொப்பம் செய்தோம். மீதம் உள்ள 5.900 கிலோ கஞ்சாவை அதே பாலிதீன் கவரில் போட்டு காக்கி கவரில் மடித்து நூலால் கட்டி, SHO சீல் வைத்தேன். சாட்சிகளாக சிவக்குமார், சபரிநாதனிடம் கையொப்பம் பெற்றேன், நானும் எதிரியும் கையொப்பம் செய்தோம். மாதிரி கஞ்சாவையும் மீதம் உள்ள கஞ்சாவையும் மற்றும் VIP gold என்ற வாசகம் உள்ள வெள்ளை நிற சாக்குப்பை ஆகியவற்றை கைப்பற்றுதல் மகசரில் சிவக்குமார், சபரிநாதன் முன்னிலையில் கைப்பற்றினேன். அந்த கைப்பற்றுதல் மகசர் அ**.**த**.**சாஆ**-3** ஆக ஏற்கனவே குறியீடு செய்யப்பட்டுள்ளது. பின்னர், 17.00 மணிக்கு எதிரிகள் மற்றும் தடயத்துடன் பண்ருட்டி காவல் நிலைய ஆய்வாளர் அவர்களிடம் தனி அறிக்கையுடன் ஒப்படைத்தேன். அந்த தனி அறிக்கை அதசாஆ.4 (தனி அறிக்கை புகைப்பட நகல் என்பதால் குறியீடு செய்ய எதிாகள் தரப்பில் ஆட்சேபனை செய்யப்பட்டது). ஆய்வாளர் என்னை விசாித்தார்கள்.

<u>குறுக்கு விசாரணை எதிரிகள் **A3,A4** தரப்பில்</u>

சம்பவ இடத்தில் 3 வது எதிரி சக்தி, 4 வது எதிரி கீர்த்தி சம்பவ இடத்தில் இல்லை அவர்களிடமிருந்து எந்த சான்று பொருட்களும் கைப்பற்றப்படவில்லை.

நான் சொல்ல என் உத்தரவுபடி தட்டச்சிடப்பட்டு
என் முன்னிலையிலும், மேற்பார்வையிலும் சாட்சிக்குப் படித்து
காண்பிக்கப்பட்டு சாட்சியால் சரியென்று ஒப்புக்
கொள்ளப்பட்டது.

ஒம்/-...ஜி.சுந்தரராஜன்,
கூடுதல் மாவட்ட (ம) அமர்வு நீதிபதி,
இன்றியமையாப் பண்டங்கள் சட்ட சிறப்பு நீதிமன்றம்,
தஞ்சாவூர்